**அனர்த்த முகாமைத்துவ நிலையம் - 2016**

-----------------------------------------------------------------------------------------------

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்தங்கள் முகாமைத்தவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களை (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) பின்தொடர்ந்து இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் படி சொத்துக்கள் அவற்றை பயன்படுத்தப்படுவதற்கு தயாரான நிலையக்கு கொண்டுவரப்பட்ட பின்னரே பெறுமானத்தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிலையத்தினால் அதற்கு முரணாக கொள்வனவு செய்த வருடத்தில் பெறுமானத்தேய்வு செய்யாதிருப்பதற்கும், கைதவிர்க்கும் வருடத்தில் ஒழு முழு வருட பெறுமானத்தேய்வினை செய்வதற்கும் கொள்கையொன்றை இனங்கண்டிருந்தது. இருப்பினும், 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலையத்தினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு முதல் பெறுமானத்தேய்வு செய்கின்ற கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

#### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2010 மே 10 ஆந் திகதி பதவி முடிவிற்கு கொண்டுவரப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் 2014 சனவரி 06 ஆந் திகதி வாகனமொன்றை அனுமதியின்றி ஓட்டிச்சென்று விபத்துக்குள்ளாக்கியிருந்தமையால் குறித்த உத்தியோகத்தரிடமிருந்து நிலையத்திற்கு அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 256,589 மற்றும் ரூபா 165,645 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக நிலையத்தினால் மாவட்டச் செயலாளர்களிற்கு அனுப்பிவைக்கப்படுகின்ற நிதிகள் பயன்படுத்தப்படுகின்ற முறைகள் மற்றும் குறித்த செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றங்கள் தொடர்பான தகவல்கள் உரிய வேளையில் அறிவிக்கப்படுவதில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ரூபா 142,104,047 கிரயம் கொண்ட 48 இடர் குறைப்புச் செயற்திட்டங்கள் நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றின் வேலை முடிவுறுத்தல் அறிக்கைகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அச் செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றங்களையும் அவற்றின் பயன்தரும் தன்மையினையும் கணக்காய்வு செய்வதற்கு முடிந்திருக்கவில்லை.

(ஆ) நிலையத்தின் நிலையான சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 5,475,000 கிரயமான பெகோ லோடர் தொடர்பிலான பௌதீக பரிசோதனை அறிக்கையும் ஏனைய ஆதார அறிக்கைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒத்த மதிப்பீட்டுப் பெறுமதிகளைக் கொண்ட 30 மோட்டார் வாகனங்களிற்காக பல்வேறு மதிப்பீட்டுப் பெறுமதிகளின் கீழ் காப்புறுதி தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அத்துடன், மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,284,431 தொகையான 38 மோட்டார் வாகனங்களிற்குரிய காப்புறுதி தவணைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்த அடிப்படை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதான அலுவலகத்திலுள்ள சொத்துக்கள் தொடர்பிலான பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 05 ஆம் பந்தி | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடகளின் பிரகாரம் வருடந்தோரும் குறைந்தது 04 கூட்டங்களேனும் நடாத்தப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதியான 2005 ஒக்தோபர் 12 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான 11 வருட காலப்பகுதியில் 10 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 395 (ஈ) | மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 யூலை மாதம் முதல் 2016 நவம்பர் மாதம் வரையிலுமான நிலையத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தாமதத்துடன் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், 2016 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று 2017 மார்ச் 22 ஆந் திகதியன்றே தயாரிக்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டில் 11 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்த 09 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப அறிக்கைகள் அல்லது முழுமையான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை

| | |
|---|---|
| (i) 3.4.3 ஆம் வழிகாட்டல் | நிலையத்தின் கொள்வனவு நடவடிக்கைகளிற்காக வழங்குனர்களை பதிவுசெய்தல் தொடர்பில் கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.2.1 (ஆ) ஆம் வழிகாட்டல் | ஆகக்குறைந்தது 03 ஆண்டு காலத்திற்காக எதிர்பார்க்கப்படுகின்ற கொள்வனவு நடவடிக்கைகள் பிரதான கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், நிலையத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பிரதான கொள்வனவுத் திட்டத்தில் மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவு நடவடிக்கைகள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன. |
| (iii) 2014 யூலை 04 ஆந் திகதிய கொள்வனவு வழிகாட்டல்கள் கோவைக்கான 28 ஆம் இலக்க மேலதிக வழிகாட்டல் | ரூபா 200,000 இற்கு மேற்பட்ட மோட்டார் வாகன திருத்தங்களிற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் தனிப்பட்ட அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், ரூபா 1,643,434 கூட்டுத்தொகையான 04 மோட்டார் வாகனங்களின் திருத்தங்களிற்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற அண்டிற்கான நிலையத்தின் நிதி விளைவுகள் ரூபா 6,159,474 பற்றாக்குறையொன்றானதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 12,255,743 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 6,396,269 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 11,634,074 ஆல் குறைந்திருந்த போதிலும், அரசாங்கத்தின் மீணடெழும் மானியம் ரூபா 27,880,486 ஆல் அதிகரித்திருந்தமையே மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2014 ஆம் ஆண்டில் மிகையொன்று காணப்பட்ட போதிலும், ஏனைய 04 ஆண்டுகளிலும் பற்றாக்குறையே காணப்பட்டது. இருப்பினும், நிதி விளைவிற்கு ஊழியர் வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வை சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 272,154,844 ஆகக் காணப்பட்ட பங்களிப்பு 2016 ஆம் ஆண்டில் ரூபா 238,364,189 ஆக மாற்றமடைந்திருந்தது.

### 3.2 நிலையத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

நிலையத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட மோட்டார் வாகனமொன்று 2012 ஆகஸ்ட் 16 ஆந் திகதி விபத்துக்குள் சிக்குண்டு ஒருவர் மரணித்தமை காரணமாக பாதிப்புக்குட்பட்ட தரப்பினரால் 2014 ஆகஸ்ட் 07 ஆந் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் நிலையத்திற்கு எதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அதனுடன் தொடர்பில் தேவையான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 21 பிரதான ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்காக நிலையத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2012 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அவற்றில் 04 ஆபத்துக்களிற்காக மாத்திரம் முன்னுரிமையளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த காலப்பகுதிக்காக நிலையத்தினால் அனர்த்தங்களை குறைத்துக் கொள்வதற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 1,749.42 மில்லியன் மொத்தச் செலவினத்தில் வெள்ளப்பெருக்கு ஆபத்தை குறைத்துக் கொள்வதற்காக 63 சதவீதமும், வரட்சியினால் ஏற்படக்கூடிய அர்த்தங்களை குறைப்பதற்காக 22 சதவீதமும், மண்சரிவு ஆபத்தைக் குறைத்துக்கொள்வதற்காக 08 சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், பெயர் குறிப்பிடப்பட்டிருந்த ஏனைய 18 இடர்கள் தொடர்பில் இடராபத்தைக் குறைத்துக் கொள்வதற்காக மொத்தச் செலவினத்தில் 07 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிலையத்தின் தயார்படுத்தல் பிரிவினால் மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய ரீதியிலான அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் வருடந்தோரும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 13 மாவட்டங்களுடன் தொடர்புடைய திட்டங்கள் 03 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்தவை என்பது அவதானிக்கப்பட்டது. அத்துடன், சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களின் பிரகாரம், உயர்வான இடராபத்து காணப்படும் மாவட்டங்களிலுள்ள கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கையினை உறுதியாக இனங்காண முடியவில்லை. மாவட்ட திட்டத்தின் பிரதான அங்கமான மாவட்டத்தின் இடராபத்தினை மதிப்பீடு செய்வதற்கான முன்னேற்பாட்டுத் திட்டம், அவசர நிலைமையினை எதிர்கொள்ளும் திட்டம் மற்றும் புனரமைப்புத் திட்டம் போன்ற திட்டங்களில் அவ்விடராபத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறையினை இனங்காண்பதற்கு முடியாதிருந்தமை காரணமாக, அத் திட்டங்களை திருத்தமாக நடைமுறைப்படுத்தக்கூடிய செயன்முறையின் தன்மையினை இனங்காண்பதற்கு முடியாது போயிருந்தது.

(இ) ரூபா 247,000,000 மொத்த மதிப்பீட்டுக் கிரயத்துடன் திறைசேரி நிதி ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற இலங்கையின் அபிவிருத்தி பல் ஆபத்துக்கள் இடர் ஏற்பு செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 68,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 10,804,000 செலவில் செயற்திட்டத்திற்குத் தேவையான மென்பொருள் முறைமை மற்றும் கணனி உபபாகங்களை கொள்வனவு செய்வதல் மாத்திரம் இடம்பெற்றிருந்த போதிலும், செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பேரளவு செயற்திட்டமொன்றாக நிலையத்தினால் அமுல்படுத்தப்பட்டிருந்த தம்புள்ள வெள்ள ஆபத்துக் குறைப்பு செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இச் செயற்திட்டத்தின் கீழ் தம்மன்னா கால்வாயினை விரிவுபடுத்தி கால்வாய் கட்டினை நிர்மாணிப்பதற்கான 07 வேலைகளிற்காக ரூபா 42 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கிடைத்திருக்காமையால் செயற்பாட்டின் தேவை மற்றும் பயனுள்ள தன்மை தொடர்பில் உறுதிப்பாட்டினை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை.

- கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 4.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், 7 வேலைகளிற்காக மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாது பகுதி பகுதியாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

- 7 வேலைகளில் 3 இனை பௌதீக ரீதியில் பரிசோதனை செய்தபோது கேபியன் மதிற்சுவரை நிர்மாணித்தமைக்காக ரூபா 5,459,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக உரிய அளவிலமைந்த கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் அவை உரியமுறையில் இணைக்கப்பட்டிருக்கவில்லை. சுவரின் பின்புறத்தில் கிரவல் இடப்பட்டு நீர் வார்க்கப்பட்டு செப்பணிடுவதற்காக ரூபா 342,498 செலுத்தப்பட்டிருந்த போதிலும், கிரவலுக்குப் பதிலாக மண் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மாவட்டச் செயலகங்களினால் அமுலாக்கப்படுகின்ற மாவட்ட மட்டத்திலான இடர் குறைப்பு சிறிய மற்றும் நடுத்தரளவிலான செயற்திட்டங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- செயற்திட்டத்திற்கான நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு முன்னர் முறைப்படியான செயற்திட்டப் பிரேரணைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இல்லாத 08 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருந்த 31 செயற்திட்டங்களிற்காக ரூபா 121,945,689 மதிப்பீட்டுப் பெறுமதியான நிதி குறித்த மாவட்டச் செயலாளர்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

- அத்துடன், பிரதேச செயலகங்களினால் வேலை மதிப்பீடுகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்காமை காரணமாக 15 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

- மாவட்டச் செயலகங்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிதியில் செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த நிதி 2016 திசெம்பர் 31 இற்கு முன்னர் நிலையத்திற்கு மீளளிக்கப்பட வேண்டிய போதிலும், அநுராதபுரம், இரத்தினபுரி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டிருந்த 31 செயற்திட்டங்களில் எஞ்சியிருந்த ரூபா 8,889,449 தொகையினை அந்த அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக மாவட்டச் செயலகங்களிற்குரிய நிர்வாக செலவினத்தை கணிப்பிடுகையில் உறுதியான அடிப்படையொன்றை பின்பற்றாது பல்வேறு அடிப்படைகளின் கீழ் நிர்வாக செலவினம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினை செயற்படுத்துவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த அதிகாரச்சட்டத்தினை திருத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் சட்ட வரையுனர் திணைக்களத்தின் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், சட்ட வரையுனர் திணைக்களத்தினால் 2017 யூன் 22 ஆந் திகதி அதிகாரச்சட்டத்திற்கான திருத்தங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அவதானிப்புக்களை சமர்ப்பிப்பதற்காக திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வானிலை அவதான திணைக்களத்திற்குரிய காணியொன்றில் ரூபா 1,034,399,368 செலவிடப்பட்டு 2010 ஆம் ஆண்டில் நிலையத்தின் தலைமை அலுவலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக் காணியினையும் கட்டிடத்தினையும் நிலையத்திற்கு கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களிடமிருந்து நிலையத்திற்கு கிடைத்திருந்த 18 மோட்டார் சைக்கில்களின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அவற்றின் பயணிக்கக்கூடிய நிலை, வைத்திருக்கும் பொறுப்புவாய்ந்த தரப்பினர் போன்ற விடயங்கள் தொடர்பில் பிந்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இச் சொத்துக்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுதல் அவ்வாறே சொத்துக்களின் உள்ளமை தொடர்பில் சிக்கலான நிலைமை காணப்படுகின்றது என்பது கணக்காய்வின் கருத்துரையாகும்.

## 4.3 சொத்துக்கள் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) "திடீர் அனர்த்தங்களை எதிர்கொள்ளல் ஆற்றலை முன்னேற்றுதல்" இற்காக நிலையத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5,000,000 கிரயமான தண்ணீர் பவுசர் இனை மொனராகலை மாவட்டச் செயலகத்திற்கு கையளிப்பதற்காக 2014 மார்ச் 14 ஆந் திகதி ஒடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த அலுவலகத்திற்கு தண்ணீர் பவுசர் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 23 ஆந் திகதி வரையிலும் அதன் உரித்தினை சட்டரீதியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்டச் செயலகங்களில் காணப்பட்ட 2008 ஆம் ஆண்டில் அகற்றப்படுதல் வேண்டுமென பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்த 62 பொருள் விடயங்களை அகற்றுவதற்கான அங்கீகாரம் 2017 பெப்ரவரி மாதம் வரையிலும் நிலையத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் புத்தகத்தின் மீதி ரூபா 18,023,370 என உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த ரூபா 67,231,890 இற்கான 162 காசோலைகள் மற்றும் ரூபா 79,562,441 இற்கான 45 பற்றுச்சீட்டுக்கள் என்பன 2016 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகளாக கருதப்பட்டு 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான காசுப்புத்தக மீதி ரூபா 30,353,972 என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதற்கமைய, நிதியாண்டு முடிவடைந்த பின்னரும் கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையினை திறந்து வைத்து கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்வதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக அரசாங்க பாதீட்டில் மூலதன மற்றுறும் மீண்டெழும் செலவினத்திற்காக முறையே ரூபா 770,500,000 மற்றும் ரூபா 12,500,000 நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருந்த தொகைகள் முறையே ரூபா 504,670,000 மற்றும் ரூபா 1,500,000 ஆக மாத்திரம் காணப்பட்டிருந்ததுடன், அது மதிப்பீட்டுப் பெறுமதியில் 65 சதவீதம் மற்றும் 12 சதவீதமாகக் காணப்பட்டது. அதற்கமைய, ஆண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்திற்குத் தேவையான நிதியினை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நிலையத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 மார்ச் 31 ஆந் திகதியளவில் தனியார் நிறுவனமொன்றினால் நிலையத்திற்கு அன்பளிப்பச் செய்யப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகையில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,000,000 பயன்படுத்தப்படாது விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) அனைத்து விதமான இடர்களையும் குறைத்துக் கொள்வதற்காக சர்வதேச நியமகங்களிற்கமைய 2015 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதிக்காக ‘‘செந்தாய் வேலைத்திட்டம்’’ என்ற பெயரில் திட்டமொன்றை தயாரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2015 ஆம் ஆண்டில் நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,300,000 மானியத்திலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பல்வேறு நடவடிக்கைகளிற்காக ரூபா 318,583 செலவிடப்பட்டிருந்த போதிலும், செந்தாய் வேலைத்திட்டத்திற்கு அமைவாக திட்டத்தினை தயாரிக்கும் பணியினை பூரணப்படுத்தவதற்கு நிலையம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிறுவனரீதியான இடர் முகாமைத்துவ திட்டத்தினை தயாரிப்பதற்கான மானியமாக 2015 யூலை 07 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 1,500,000 தொகையிலிருந்து 2017 மே 19 ஆந் திகதி வரையிலும் ரூபா 396,000 பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

அவசர தேவைகளிற்காக நிலையத்தின் நிதி ஏற்பாட்டிலிருந்து 2014 யூலை மற்றும் ஒக்தோபர் மாதங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அனர்த்த நிவாரண தொழிலாளர்களை இனங்காணக்கூடிய மேலங்கி இருப்பிலிருந்து ரூபா 1,483,515 பெறுமதியான 2997 அலகுகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது 351 அலகுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு மேலங்கிகள் எஞ்சியிருக்கையில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி உதவியினைப் பயன்படுத்தி 2015 சனவரி மாதத்தில் ரூபா 990,000 கிரயத்தில் 2000 மேலங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவையும் 2016 திசெம்பர் 31 வரையிலும் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

### 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 17,081,640 பெறுமதியான 70 படகுகள் மற்றும் 72 சங்கிலி வாள்கள் என்பவற்றை 2016 நவம்பர் 28 ஆந் திகதிக்கு முன்னர் வழங்குவதற்காக நிலையத்தினால் தெரிவுசெய்யப்பட்டிருந்த வழங்குனர்கள் இணங்கியிருந்த போதிலும், குறித்த கட்டளைகள் 2016 திசெம்பர் 14 மற்றும் 31 ஆந் திகதிகளிலேயே நிறைவேற்றப்பட்டிருந்தன. அதன் காரணமாக, தாமதிக்கப்பட்ட காலத்தினுள் கூட்டப்பட்ட பெறுமதியின் மீதான விகிதாசார மாற்றத்தின் மீது ரூபா 616,960 கூட்டுத்தொகை பெறுமதிசேர் வரியாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 கொள்வனவுகள் மற்றும் ஒப்பந்த செயன்முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தின் குருணாகல் மாவட்ட அலுவலகத்தின் இடர் குறைத்தல் செயற்திட்டத்தின் கீழ் குடிநீர் கிணறுகளை நிர்மாணித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2016 நவம்பர் 30 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடுகம்பல பிரதேசத்தில் குடிநீர் கிணற்றினை நிர்மாணித்தல் வேலைகள் ஒரு மாதத்தினுள் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ஒப்பந்தத்தினை பொறுப்பேற்றிருந்த சமூக அடிப்படை நிறுவனத்தினால் குறித்த காலத்தில் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிட்டு தவறான அறிக்கையொன்று நிலையத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) பன்னல பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் ரூபா 4,033,835 மதிப்பீட்டுப் பெறுமதியினைக் கொண்ட 05 குடிநீர் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2017 சனவரி 26 ஆந் திகதி வரையிலும், அக்கிணறுகள் குடிநீரை பெறுவதற்கு பொருத்தமான விதத்தில் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தினால் தனியார் கம்பனியொன்றுடன் 77 சுனாமி கோபுரங்களை புனரமைத்து திருத்துவதற்காக ரூபா 134,746,419 பெறுமதிசேர் வரி உள்ளடங்கலான பெறுமதிக்கு 2016 திசெம்பர் 16 ஆந் திகதி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 21 ஆந் திகதி முற்பணமாக ரூபா 8,345,898 செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 90 நாட்களில் குறித்த பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அப்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

உடன்படிக்கைக்கு அமைய 06 மாதங்கள் கடந்த பின்னரும் கூட அனர்த்த முன் எச்சரிக்கை கோபுரங்களை புனரமைப்பதற்கு முடியாது போனமைக்கு சீரற்ற காலநிலை, தொழில்நுட்ப உபகரணங்களை பெற்றுக்கொள்வதில் தாமதம், இலங்கை தரைப்படையின் சமிக்கை படைப்பிரிவின் உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு கோபுரத்திற்கும் சென்று பரீட்சிப்பதற்கு காலம் எடுத்திருந்தமை போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்ததாக பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 21 ஆந் திகதி கொள்வனவுத் திட்டத்திற்கமைய, அவசர நிலைமைகளின் போதான கொள்வனவுகளிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 54.8 மில்லியன் தொகையிலிருந்து 19 வகையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 941,794 செலவில் செய்திப்பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. இருப்பினும், ரூபா 12.86 மில்லியன் தொகைக்கான 04 வகைகளிற்குரிய 1213 பொருள் விடயங்களின் கொள்வனவு நடவடிக்கைகள் நிலையத்தினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. 55 சங்கிலி கப்பிகளை கொள்வனவு செய்வதற்காக 2016 திசெம்பர் 22 ஆந் திகதி ரூபா 4,243,250 வரி நீங்கலான பெறுமதிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) அக்குரண வெள்ள அபாய தடுப்புச் செயற்திட்டத்தின் மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு முன்னர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினால் 2014 ஒக்தோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலத்தின் ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த அடிப்படை விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்காமை காரணமாக நெடுஞ்சாலையின் குறுகலான இடங்களில் காணப்படுகின்ற அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றுவதற்காகவும் குறுகலான இடங்களை அகலப்படுத்துவதற்காகவும் எவ்வித தொகையும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்தின் கீழ் 12700 கன மீற்றர் சேற்றினை அகற்றுவதற்காக ஒப்பந்ததாரரிற்கு ரூபா 18,122,900 செலுத்தப்பட்டிருந்ததுடன், அகற்றப்படுகின்ற சேற்றின் கனமீற்றரை சான்றுறுதிப்படுத்துதல் தற்காலிக அடிப்படையில் அமர்த்தப்பட்டிருந்த வேலைப் பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி செயற்திட்டத்தின் மூலம் 486.76 கனமீற்றர் சேறு அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்குரிய வேலைப் பெறுமதி ரூபா 694,606 ஆன போதிலும், குறித்த ஒப்பந்த தாரரிற்கு ரூபா 17,428,294 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட உடன்படிக்கையின் படி, வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதி 2015 நவம்பர் 14 ஆந் திகதியாகக் காணப்பட்ட போதிலும், 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன், செயற்திட்டக் காலத்தினை நீடிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட தாமத நாளொன்றிற்காக ரூபா 4,700 வீதம் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பதுளை மாவட்டத்திலுள்ள கெஹல்எல்ல ஸ்ரீ ஆனந்தராமயவின் பாதுகாப்பிற்காக ரூபா 1,569,490 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கொங்கரீட் சுவரின் பின்புறத்தில் மண்ணை நிரப்புதல் உரிய விதத்தில் செப்பனிடப்படாதிருந்ததுடன் சுவரிற்கு மேற்புறத்தில் அமைந்துள்ள நிலப்பகுதியிலிருந்து வழிந்தோடுகின்ற நீர் சுவரின் பின்புறத்தில் நேரடியாக வந்துசேரும் ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4.8 பதவியணியினர் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) நிலையத்தின் பதவியணிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 344 ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 பதவிகளில் 114 வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களில் 15 பதவிகளிற்குரிய 62 வெற்றிடங்களை நிரப்புவதற்கான செய்திப்பத்திரிகை விளம்பரத்திற்காகவும் நேர்முகப் பரீட்சைக்காகவும் ரூபா 806,269 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவற்றில் 09 பதவிகளிற்குரிய 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிலையம் தவறியிருந்தது. அத்துடன், 04 சாரதி பதவிகள் மற்றும் 25 அலுவலக உதவியாளர் பதவிகளிற்காக பகிரங்க செய்திப்பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்படாது உள்வாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் 04 சாரதி பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிரந்தர நியமனமொன்று செய்யப்படும் வரை தற்காலிக தீர்வொன்றாகவே பதிற்கடமை நியமனமொன்று செய்யப்படுதல் வேண்டுமென்றும் முழுநேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவைப்படுமாயின் நிரந்தர நியமனமொன்றை தாமதிக்காது மேற்கொள்தல் வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக 06 மாதங்கள் முதல் 35 மாதங்கள் வரையிலான காலவீச்சில் நிலையத்தின் 04 பிரதிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் 01 உதவிப் பணிப்பாளர் பதவியில் பதிற்கடமை ஆற்றுவதற்காக நிலையத்தின் 05 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 658,558 பதிற்கடமை படி செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க கூட்டுத்தாபனமும் அதற்குரிய வரைவு ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்குகளை நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிலையத்தினால் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 01 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், திருத்திய நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு 2017 மே 09 ஆந் திகதி வரை காலதாமதம் செய்யப்பட்டிருந்தது.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டம் 2016 திசெம்பர் 27 ஆந் திகதி திருத்தப்பட்டிருந்தமையால் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்த குறிக்கோள்கள் அடையப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. திருத்திய திட்டத்தின் பிரகாரம் ரூபா 100.1 மில்லியன் மொத்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 25.3 மில்லியன் மீண்டுவரும் கொள்வனவுகளிற்காகவும் ரூபா 54.8 மில்லியன் அவசர நிலமைகளின் கொள்வனவு நடவடிக்கைகளிற்காகவும் எஞ்சிய ரூபா 20 மில்லியன் மூலதன உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஒதுக்கப்பட்டிருந்த மூலதன நிதி ஏற்பாட்டிலிருந்து 98.93 சதவீதமான ரூபா 74 மில்லியன் தொகை 2016 திசெம்பர் மாதத்திலேயே திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவுகளிற்காக மேற்படி நிதியினை உரிய விதத்தில் பயன்படுத்ததுவதற்கு நிலையத்திற்கு முடிந்திருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 37 இடர் குறைப்பு செயற்திட்டங்கள் மற்றும் நிதி ஏற்பாட்டின் பெறுமதி ரூபா 511,853,709 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்ற அறிக்கையின் படி செயற்திட்டங்களின் எண்ணிக்கை 157 எனவும் நிதி ஏற்பாட்டின் பெறுமதி ரூபா 713,849,427 எனவும் குறிப்பிடப்பட்டிருந்தன. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறை நிலைமைக்கேற்ப அமுலாக்குகையில் ஒருசில திருத்தங்களை செய்யவேண்டி ஏற்பட்டிருந்ததாக நிலையத்தினால் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கையிலும் அதிலுள்ள ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் நிதி ஏற்பாடுகளை ஒதுக்குகையிலும் செயற்திட்டம் தொடர்பான சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு செயற்திட்டத்தினை அமுல்படுத்தக்கூடிய இயலுமை மற்றும் அதன்மூலம் கிடைக்கக் கூடிய பிரதிபலன்கள் ஆராயப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாமை காரணமாக ரூபா 76,685,049 நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த 21 செயற்திட்டங்கள் பல்வேறுபட்ட காரணங்களாக அமுல்படுத்த முடியாது போயிருந்தன.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிலைய பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணஞ்சியக் கட்டுப்பாடு | (i) அலுவலகத்தினால் பயன்படுத்தவதற்காகவும் விநியோகிப்பதற்காகவும் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தும் ஒரு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் பொருட்களை தனித்தனியாக இனங்காண முடியாதுள்ளமை. |
| | (ii) 2016 சனவரி 07 ஆந் திகதி இருப்புப் புத்தகங்கள் கணக்காய்வு செய்யப்பட்டு தீர்க்கப்பட்ட பின்னர் 23 பொருள் விடயங்களிற்குரிய 2016 ஆம் ஆண்டிற்கான பதிவுகள் உள்ளடக்கப்பட்டிருக்காமை. |
| | (iii) 05 பொருள் வகைகளிற்குரிய 3,352 பொருள் விடயங்கள் களஞ்சியத்திற்கு பெறப்பட்ட திகதிகள் பொருள் பெறுவனவு பத்திரத்திற்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியாக காணப்பட்ட போதிலும், வேறுபட்ட திகதிகளில் இருப்புப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தமை. |
| | (iv) 05 பொருள் வகைகளிற்குரிய 3313 பொருள் விடயங்கள் வழங்குனரால் வழங்குவதற்கு இணங்கப்பட்ட திகதிகளைக் காட்டிலும் 14 நாட்கள் முதல் 36 நாட்கள் வரை தாமதிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தமை. |
| | (v) 03 மாவட்ட அலுவலகங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள 03 வாகனங்கள் தொடர்பான விபரங்கள் பௌதீக பரிசோதனை அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை |
| (ஆ) கணக்கீடு | (i) செலுத்தப்பட வேண்டிய வைப்புப் பணத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தேர்சியாக கணக்குகளில் காண்பிக்கப்படுகின்றமை. |
| | (ii) செலவினத்தை திருத்தமாக கணிப்பிட்டு கணக்கீடு செய்திருக்காமை. |
| (இ) சொத்துக்களை கையேற்றல் | நிலையத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 39 வாகனங்களில் 31 வாகனங்களின் உரித்தினை நிலையத்திற்கு கையேற்றிருக்காமை. |